www.Padasalai.Net www.CBSEtips.in

# R முதல் பருவ பொது தொகுத்தறித் தேர்வு – 2023

## ஏழாம் வகுப்பு

நேரம்: 2.00 மணி | தமிழ் | மதிப்பெண்கள்:60

அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 5x1=5

1. 'நெறி' என்னும் சொல்லின் பொருள் ________ ?

அ) குறிக்கோள் ஆ) வழி இ) கொள்கை ஈ) அறம்

2. வாய்மை எனப்படுவது ________ ?

அ) அன்பாகப் பேசுதல் ஆ) தீங்கு தராத சொற்களைப் பேசுதல்

இ) தமிழில் பேசுதல் ஈ) சத்தமாகப் பேசுதல்

3. அனைத்துண்ணி என்னும் சொல்லை பிரித்து எழுதக் கிடைப்பது ________

அ) அனைத்து + துண்ணி ஆ) அனைத்து + உண்ணி

இ) அனை + உண்ணி ஈ) அனைத் + உண்ணி

4. தேசியம் காத்த செம்மல் எனப் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரைப் பாராட்டியவர் ________ ?

அ) இராஜாஜி ஆ) பெரியார் இ) திரு.வி.க. ஈ) நேதாஜி

5. வன்தொடர்க் குற்றியலுகரம் இடம்பெறாத சொல் ________ ?

அ) பாக்கு ஆ) பாட்டு இ) மஞ்சு ஈ) உப்பு

ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக 2x1=2

6. ஒலியின் வரிவடிவம் ________ ஆகும்.

7. யானைக் கூட்டத்திற்கு ஒரு ________ யானை தான் தலைமை தாங்கும்.

இ) பொருத்துக 4x1=4

8. பந்தர் – முதற் போலி

9. மைஞ்சு – முற்றுப் போலி

10. அஃகு – இடைப் போலி

11. அரையர் – கடைப் போலி

ஈ) ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடையளி 5x2=10

12. காட்டின் பயன்களாகக் கவிஞர் சுரதா கூறுவன யாவை ?

13. தமிழ்மொழியின் பண்புகளாக நாமக்கல் கவிஞர் கூறுவன யாவை ?

14. மொழியின் இரு வடிவங்கள் யாவை ?

15. மானின் வகைகள் சிலவற்றின் பெயர்களை எழுதுக ?

16. எப்போது தன் நெஞ்சே தன்னை வருத்தும் ?

CamScanner

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



17. குற்றியலுகரம் என்னும் சொல்லை பிரித்து விளக்கம் தருக ?
18. ஔகாரம் எப்போது முழுமையாக ஒலிக்கும் ?

**உ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடையளி** 3x4=12

19. பேச்சு மொழிக்கும், எழுத்து மொழிக்கும் இடையே உள்ள வேறுபாடுகளுள் நான்கினை எழுதுக ?
20. புலிகள் குறித்து நீங்கள் அறிந்து கொண்ட செய்திகளைத் தொகுத்து எழுதுக ?
21. பாஞ்சாலங்குறிச்சியில் வீடுகள் எவ்வாறு இருக்கும் ?
22. தொழிலாளர் நலனுக்காக முத்துராமலிங்கத் தேவர் செய்த தொண்டுகள் யாவை ?
23. தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகளாகக் கவிஞர் கூறுவன யாவை ?

**ஊ) அடி பிறழாமல் எழுதுக.** 3+2=5

24. "அருள்நெறி அறிவைத் தரலாகும்" எனத் தொடங்கும் எங்கள் தமிழ் பாடலை எழுதுக.
25. அரசு என முடியும் குறளை எழுதுக.

**எ) அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** 5x2=10

26. பொருந்தாத சொற்களை எடுத்தெழுதுக ?
   அ) பாக்கு, பஞ்சு, பாட்டு, பத்து
   ஆ) ஆறு, மாசு, பாகு, அது
27. கலைச்சொல் எழுதுக
   அ) Media ஆ) Sacrifice
28. பிழைகளை திருத்தி சரியாக எழுதுக ?
   அ) பசு கன்றை ஈன்றன.
   ஆ) அரசர்கள் நல்லாட்சி செய்தார்
29. தொகைச்சொற்களை விரித்து எழுதுக.
   அ) முத்தமிழ் ஆ) ஐந்திணை
30. இடைச்சொல் 'கு' சேர்த்து தொடரை எழுதுக.
   அ) செடி பாய்ந்த நீர் ஆ) முல்லை தேர் தந்தான் பாரி

**ஏ) ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி:** 1x6=6

31. ஜாதவ்பயேங் காட்டை எவ்வாறு உருவாக்கினார் ?
32. வ.உ.சிதம்பரனாரின் உரையை வாழ்க்கை வரலாறாகச் சுருக்கி எழுதுக.

**ஐ) கடிதம் (அல்லது) கட்டுரை எழுதுக:-** 1x6=6

33. நீங்கள் சென்று வந்த சுற்றுலா குறித்து உங்கள் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.
34. "தாய்மொழிப் பற்று" தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.
   (முன்னுரை – மொழிப்பற்றிய விளக்கம் – தாய்மொழி – தாய்மொழிப்பற்று – நமது கடமை – முடிவுரை)

------

www.Padasalai.Net

CamScanner

Kindly send me your study materials to padasalai.net@gmail.com